**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

**டெங்கு கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக இந்தியா 500 லீட்டர் டெக்னிக்கல் மலத்தியன் அன்பளிப்பு**

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் தற்போதைய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இலங்கையின் கௌரவ சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ அவர்களிடம் 500 லீட்டர் டெக்னிக்கல் மலத்தியனை (Technical Malathion) இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இன்றைய தினம் கையளித்தார்.

2. இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய அரசாங்கம் மற்றும் மக்களால் இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் அன்பளிப்பாக இப்பொதி வழங்கிவைக்கப்படுகின்றது. UPL Limited என்ற இந்திய நிறுவனத்தால் வழங்கப்பட்ட இப்பொதியானது கோரிக்கை விடுக்கப்பட்ட இருவாரங்களுக்குள் கொழும்பை வந்தடைந்துள்ளது. நெருக்கடியான காலப்பகுதியில் முதற்கண் உதவி வழங்கும் இந்தியாவின் வகிபாகத்தை இது மீண்டும் சுட்டிக்காட்டுகின்றது.

3. 2026 இல் இலங்கையில் 86000 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டனர், இதில் மேல் மாகாணத்தில் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை சுகாதார அதிகாரிகள் முன்னெடுத்துள்ள பாரியளவான புகை மற்றும் மருந்து தெளித்தல் மூலமான நடவடிக்கைகளுக்கு டெக்னிக்கல் மலத்தியன் ஆதரவாக அமையும்.

4. இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பினை மீள உறுதிப்படுத்தினார். மேலும், இந்த விநியோகத்தை எளிதாக்குவதில் ஒத்துழைப்பு வழங்கி ஆதரவளித்த சுகாதார அமைச்சு மற்றும் சகல இலங்கை அதிகாரிகளுக்கும் அவர் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

5. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான, மக்களை மையமாக கொண்டதும் நெருக்கமானதுமான பங்குடைமைக்கு இது மற்றொரு உதாரணமாகும், அத்துடன் இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கைமீதான அதன் நிலையான அர்ப்பணிப்பினையும் பிரதிபலிக்கின்றது.

*****

கொழும்பு
04 ஆகஸ்டு 2026